பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 07 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** ஹோர்முஸ் நீரிணையில் இந்தியா மற்றும் உலக நாடுகளின் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும் என்று ஈரான் அதிபரிடம் பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

**2.** வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் இன்று முதல் அமலுக்கு வருகிறது.

**3.** தமிழகத்தில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சர் திரு. விஜய், விருதுகளை வழங்கி பாராட்டினார்.

**4.** பொறியியல் படிப்புகளில் மாணவர்கள் சேர்வதற்கான தரவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

**5.** இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணையில் இந்தியா மற்றும் உலக நாடுகளின் தடையற்ற கப்பல் போக்குவரத்தின் முக்கியத்துவத்தை ஈரான் அதிபர் மசூத் பெஷஷ்கியானிடம் பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், மேற்காசியாவில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஈரான் அதிபருடன் தாம் தொலைபேசியில் உரையாடியதாக கூறியுள்ளார்.

சண்டைநிறுத்தப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை தாம் வரவேற்றதாகவும், இந்தப் பிராந்தியத்தில் நீடித்த அமைதியை இப்பேச்சுவார்த்தை ஏற்படுத்தும் என்று தாம் நம்புவதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் நாடு முழுவதும் இன்று அமலுக்கு வருகிறது.

நாட்டின் கிராமப்புறங்களில் ஒவ்வொரு நிதியாண்டிலும் 125 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பை இந்தச் சட்டம் உறுதி செய்கிறது.

கிராப்புறப் பகுதிகளை வலுப்படுத்தும் வகையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தை செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் 95 ஆயிரத்து 692 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஊரகப் பகுதிகளில் 100 நாட்கள் வேலை வழங்கும் ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்திற்கு மாற்றாக, 125 நாட்கள் வேலைவாய்ப்பை உறுதி செய்வதை இந்தப் புதிய சட்டம் நோக்கமாக கொண்டுள்ளது.

கிராமப்புற வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கவும், வருவாய் பாதுகாப்பை உறுதி செய்யவும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தவும் உதவும் வகையில் புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின்கீழ் ஊதியத்தை உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

தமிழகத்தில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சர் திரு. விஜய் விருதுகளை வழங்கி பாராட்டினார்.

சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் மாநாடு நேற்று நிறைவடைந்தது.

இந்த மாநாட்டில் தொடக்க உரையாற்றிய முதலமைச்சர், ரேஷன், கல்வி, குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அளிப்பதில் அதிகாரிகள் தீவிர கவனம செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும் சட்டம்-ஒழுங்கு, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டதாக அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மாநாட்டின் நிறைவாக, ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக விருதுகள் வழங்கப்பட்டன.

சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருதை கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் ஆட்சியர் திருமதி அழகுமீனாவுக்கும், சிறந்த காவல் ஆணையருக்கான விருதை ஆவடி முன்னாள் ஆணையர் திரு. சங்கருக்கும் திரு. விஜய் வழங்கி பாராட்டினார்.

இதேபோல் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயலாற்றிய ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

<<<<>>>>

தமிழக வெற்றிக் கழகம் சென்னையை அடுத்த கோவளத்தில் இன்று நடத்த உள்ள ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி பங்கேற்கும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு. மாணிக்கம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று திரு. மாணிக்கம் தாக்கூரை அமைச்சர்கள் திரு. ஆனந்த், திரு. ஆதவ் அர்ஜுனா ஆகியோர் சந்தித்து ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. மாணிக்கம் தாக்கூர், த.வெ.க. உடனான கூட்டணி நீண்டகாலம் தொடரும் என்றும், தங்கள் கட்சி சார்பில் அமைச்சர்கள் உள்ளிட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

<<<>>>

அஇஅதிமுகவின் 10 மாவட்ட நிர்வாகிகளுடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வரும் 3, 4ஆம் தேதிகளில் ஆலோசனை நடத்த உள்ளார்.

சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் என்று அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

<<<>>>

தமிழகத்தில் பொறியியல் படிப்புகளில் மாணவர்கள் சேர்வதற்கான தரவரிசைப் பட்டியலை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் சென்னையில் இன்று வெளியிடுகிறார்.

இணைய வழி கலந்தாய்வுக்கான அட்டவணையையும் அவர் வெளியிட உள்ளார்.

பொறியியல் கல்லூரிகளில் சேர இந்த ஆண்டு சுமார் 2 லட்சத்து 42 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டத்தில் பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிக அளவில் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும் வருவாய் தங்களது இடுபொருள் செலவுகளுக்கு உதவிடுவதாக பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — பயனாளிகள் - 30 Sec. )***

<<<<>>>>

வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இதன் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு வங்கக் கடல் மற்றும் பங்களாதேஷை ஒட்டியுள்ள பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதன் காரணமாக

காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

வரும் **3, 4**ஆம் தேதிகளில் கோவை மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஜப்பான் பிரதமர் **Sanae Takaichi** மூன்று நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

------------

இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் தெரிவித்துள்ளார்.

------------

பெட்ரோ கெமிக்கல் தயாரிப்புகளுக்கான சுங்கவரி விலக்கு வரும் **15**ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

------------

இந்த ஆண்டு புனித அமர்நாத் யாத்திரை நாளை தொடங்க இருப்பதை முன்னிட்டு ஜம்மு-கஷ்மீரில் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

------------

தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை தலைமை இயக்குநராக இருந்த திருமதி சீமா அகர்வால் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, அப்பதவிக்கு உணவுப் பொருள் வழங்கல் துறை தலைமை இயக்குநர் திரு. வெங்கட்ராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

------------

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குள் கைப்பேசி கொண்டு வருவதைக் கண்காணிக்கும் பணி இன்று முதல் கடுமையாக அமல்படுத்தப்படும் என்று கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

------------

ஆசிரியர் ஒருவரின் ஊதிய நிலுவைத்தொகையை வழங்க 30 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றதாக திருச்சியில் மாவட்ட பொறுப்பு கல்வி அலுவலர் புகழேந்தியை லஞ்ச ஒழிப்புத்துறை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே வனப்பகுதியில் மான் வேட்டையில் ஈடுபட்ட 3 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

------------

செங்கல்பட்டு பேருந்து நிலைய பகுதியில் காவல்துறையினர் மேற்கொண்ட வாகன சோதனையில் தடை செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளை விற்பனை செய்ததாக பெண்கள் உட்பட 3 பேரை கைது செய்யப்பட்டனர்.

------------

காஞ்சிபுரம் அரசு தலைமை பொது மருத்துவமனையில் நடைபெற்ற உலக ரத்த கொடையாளர் தின விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி திவ்யஸ்ரீ தலைமையில் ரத்த தான உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

------------

சென்னை சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள அம்மா உணவகத்தில் உணவின் தரம் மற்றும் சமையலறை பராமரிப்பு ஆகியவற்றை மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கட்ரமணன் ஆய்வு செய்தார்.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.**

**Chester-Le Street-ல் இந்திய நேரப்படி இரவு 10 மணிக்கு இப்போட்டி தொடங்கும்.**

**இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ட்வெண்ட்டி ட்வெண்ட்டி போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.**

-------------

**உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி, ஆஸ்திரேலிய இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.**

**லண்டனில் நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 125 ரன் எடுத்தது.**

**126** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களறமிங்கிய ஆஸ்திரேலியா அணி **13** ஓவரில் இலக்கை எட்டியது.

-------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நார்வே அணி **2-1** என்ற கோல் கணக்கில் ஐவரி கோஸ்ட் அணியை வென்றது.

டெக்சாசில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் நார்வே அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நியூயார்க்கில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஃபிரான்ஸ் அணி **3-0** என்ற கோல் கணக்கில் ஸ்வீடன் அணியை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

------------

பெல்ஜியத்தில் வரும் **5**ஆம் தேதி தொடங்க உள்ள **21** வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஹாக்கி தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<The End>>>>**